Adulteration of milk

* 465 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware of the fact that large scale adulteration of milk is carried on by milk vendors in Tiruchirappalli Municipal area; and

(b) if so, the action taken to prevent such adulteration?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) திருச்சிராப்பள்ளி நகராட்சியில் உணவுக் கலப்படத்தடைச் சட்டத்தின்கீழ் குறிப்பிட்ட தேதிகளிலும் முன்னறிவிப்பில்லாமலும் பால் மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறது. பாலில் கலப்படம் செய்பவர்களின் மேல் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்வதன் மூலம், பாலில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு மிகக் கண்டிப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே. விநயகம்: வெளிக் கிராமங்களில் இருந்து திருச்சி நகரத்திற்குள் பால் கொண்டு வருகிறவர்கள் வீதியில் இருக்கிற குழாய்களில் தண்ணீரைப் பிடித்துக் கொண்டு விற்கிறார்கள் என்ற புகார் வந்ததா? அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: வருகிற புகார் எல்லாம் திருச்சி நகரத்தில் உள்ள வீதிக் குழாய்களில் போதுமான தண்ணீர் வரவில்லை என்பதுதான். (சிரிப்பு)

திருவண்ணாமலையில் பஸ் நிலையம்

* 466 வினா.—திரு. பி. எஸ். சந்தானம்: மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் நகராட்சிமன்றம் நடத்தும் பஸ் நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றதா?

(இ) ஆமெனில் அந்த பஸ் நிலையத்திற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது?

(உ) இந்த ஆண்டு மேலும் ஒரு பஸ் நிலையம் கட்ட சர்க்காரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(எ) இப்பொழுது கட்ட வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கும் நகராட்சிமன்றத்தின் பஸ் நிலையத்தின் மதிப்பீடு என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) ரூ. 37,071.

(உ) ஆம்.

(எ) ரூ. 4,22,000.

திரு. பி. எஸ். சந்தானம்: சட்டமன்றத் தலைவரவர்களே, முன்னதாகக் கட்டப்பட்ட பஸ் நிலையம் நல்லமுறையில்தான் செயல்பட்டு வருகிறது. இப்பொழுது தனியார் செளகரியத்தை

முன்னிட்டு சர்க்காருக்கு வீண் செலவு ஏற்படுத்தக் கூடிய முறையில் கட்டப்படக் கூடிய இந்த பஸ் நிலையத்தைக் கட்டாமல் இருப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே இருந்த பஸ் நிலையம் ஊருக்கு மத்தியப் பகுதியில் இல்லாத காரணத்தால் மத்தியப் பகுதியொன்றைத் தேர்ந்தெடுத்து அங்கே பஸ் நிலையம் கட்டப்படவேண்டுமென்ற நகராட்சிமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க இப்பொழுது அதற்கான உரிமம் வழங்கப்பட்டு அதற்காக 25 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது.

சின்னாற்றின் குறுக்கே பாலம்

*467 வினா.—திரு. க .முருகேசன்: மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி வட்டம், பாலக்கோடு-கசர்குளி ரோட்டில் சின்னாறு குறுக்கே பாலம் கட்டும் திட்டம் தற்போது என்ன நிலையில் உள்ளது, எப்போது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் நிச்சயித்துள்ள முக்கியத்துவப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தான் "இதர சாலைகளின்" கீழ் புது வேலைகள் துவங்க அரசு அனுமதி அளிக்கிறது. பாலக்கோடு—கசர்குளி சாலையில் 5-வது மைல் 7-வது பர்லாங்கில் சின்னாற்றின் குறுக்கே பாலம் கட்டும் வேலையானது, மாவட்ட அபிவிருத்தி மன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 வேலைகளில், 3-வது வேலையாக சேர்க்கப்பட்டுள்ளது. "இதர சாலைகளில்" ஏற்கெனவே 212 வேலைகள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன. கேள்வியில் சொல்லும் வேலையை விட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை அனுமதித்த பிறகுதான் இந்த வேலையை எடுத்துக் கொள்ள இயலும்.

பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்

*468 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மதிப்பிற்குரிய உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை tribal-block — குகள் இருக்கின்றன?

(இ) கோவை மாவட்டத்தில் பர்கூர் மலைப் பிரதேசத்தை ஒரு tribal-block — காகச் செய்யும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இம்மாநிலத்தில் பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள் இரண்டு உள்ளன. ஒன்று சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லிமலை வட்டாரத்திலும், மற்றொன்று ஏர்க்காடு வட்டாரத்திலும் உள்ளது.

(இ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை.